**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Venkatesan
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 13th day of September 2019.

**13/09/2019.**

**S.C.No.110/2019**　　**PW**　　Tr. Venkatesan

**முதல் விசாரணை**

நான் மதுரவாயலில் குடியிருக்கிறேன். 4வது பிளாக் எம் எம் டியில் குடியிருந்தேன். தற்போது வானகரத்தில் குடியிருந்து வருகிறேன். என் சொந்த ஊர் செஞ்சி ஊரை அடுத்த நயம்பாடி. சத்திய ஸ்டிக்கர் என்ற பெயரில் 16 வருடங்கள் ஆக கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் ஸ்டிக்கர் ஒட்டும் வேலை செய்து வருகிறேன். தற்போது Numbering செய்வதற்கு ரூ.40 வாங்குவேன். நான்கு எழுத்துக்களுக்கு ரூ.40 வாங்குவேன். 28.11.2014ந் தேதியன்று சிபிசிஐடி யிலிருந்து ஒரு நபர் எனது அலுவலகத்திற்கு வந்து இருந்தார். என்னிடம் ஸ்டிக்கர் ஏதேனும் ஓட்டினர்களா என கேட்டார். அதன்பின்பு என்னை சிபிசிஐடி அலுவலகத்திற்கு வர சொன்னார். நான் எக்மோரில் உள்ள அலுவலகத்திற்கு சென்றேன். ஆய்வாளர் ஆர் டி ஓ ஸ்டிக்கர் ஓட்டினீர்களா என்று என்னிடம் கேட்டார். அதன்பின்பு அந்த ஸ்டிக்கரை என்னிடம் காண்பித்தார். அப்போது நான் தான் ஆர் டி ஓ ஸ்டிக்கரை அவர்கள் கையில் கொடுத்து அனுப்பினேன். எனக்கு யாரிடம் கொடுத்தேன் என்று தெரியாது. சிபிசிஐடி அலவலகத்தில் அந்த நபரின் பெயர் என்னிடம் சொன்னார்கள். என்னை சிபிசிஐடி போலிசார் விசாரித்தார்கள்.நீதிமன்றத்தில் இருக்க கூடிய ஆர் டி ஓ ஸ்டிக்கர் தான் என்னிடம சிபிசிஐடி அலுவலகத்தில் காட்டபட்டது. அது ஏற்கனவே சாபொ 3 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கடைக்கு டிஎன்ஜீஎஸ்டி எண் உள்ளது. அந்த ஆவணத்தை போலிசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை. என்னை அழைக்கும்போது என்னால் போக முடியவில்லை. சாபொ3 ஸ்டிக்கர் என் கடையில் தயாரிக்கபட்டது என்று காண்பிக்கும் வகையில் கடையின் பெயரோ அல்லகூ வேறு குறிப்பிட்ட

அடையாளம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. என் கடைக்கு பில் புக் உள்ளது. சாபொ3 க்கான பில் எதுவும் போலிசாரிடம் நான் கொடுக்கவில்லை. பில் கொடுக்கவில்லையென்று சாட்சி தாமாக முன்வந்து சொல்கிறார். சாபொ3 ஸ்டிக்கர் என் கடையை தவிர வேறு கடைகளிலும் கிடைக்கும் என்றால் சரிதான். சாபொ3 ஸ்டிக்கரை கணிணியில் வடிவமைத்த பின்பு தான் பிரிண்ட் எடுக்கபடும் என்றால் சரிதான். கணிணியில் தயாரிக்கபட்ட வடிவமைப்பு குறித்த பதிவுகளை கணிணியில் இருந்து போலிசார் கைப்பற்றவில்லை. சாபொ3 ஸ்டிக்கர் எந்த தேதியில் எந்த நேரத்தில் தயாரிக்கபட்டது என்பதை காண்பிக்கும் வகையில் எந்த ஆவணங்களும் இல்லையென்றால் சரிதான். ஸ்டிக்கரை வாங்கி சென்ற நபரை நான் போலிசாரிடம் அடையாளம் காட்டவில்லையென்றால் சரிதான். ஸ்டிக்கரை என் கடையில் தயாரிக்கவில்லையென்றாலும், அதை நான் கொடுக்கவில்லையென்றாலும், போலிசார் கேட்டு கொண்டதின் படி நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-Deepthi Arivunithi

Taken to my dictation and corrected
by me to open court read over to the witness
and admitted by him as correct.

Sd/-Deepthi Arivunithi
I Addl.Dist.Judge,
I Additional District court,
Tiruvallur.